**நவம்பர்– 20**

# TNPSC துளிகள்

- இந்திய இரயில்வேயின் பயணிகள் மற்றும் சாதாரண மக்களுக்காக இந்திய இரயில்வே நிர்வாகமானது மும்பையின் மத்திய இரயில் நிலையத்தில் முதல் முறையாக பெட்டகம் போன்ற ஓய்வு அறைகளை உருவாக்கியுள்ளது.
    - இந்தப் பெட்டக வடிவிலான தங்கும் அறையானது சிறிய படுக்கை அளவிலான பெட்டகங்களைக் கொண்டதோடு மட்டுமல்லாமல் மலிவு விலையில் ஓர் இரவு தங்கும் வகையிலான வசதியையும் வழங்குகிறது.
- ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ், அமெரிக்காவைச் சேர்ந்த ஷோம்பி ஷார்ப் என்பவரை இந்தியாவிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் குடியேற்ற ஒருங்கிணைப்பாளராக நியமித்துள்ளார்.
    - அவர் இந்தியாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் குழுவை வழி நடத்தச் செய்வதோடு நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளைப் பூர்த்தி செய்வதற்காக வேண்டி மேற்கொள்ளப்படும் கோவிட்-19 பெருந்தொற்றிற்கு எதிரான இந்தியத் திட்டங்களுக்காகவும் அவர் பணியாற்றுவார்.

# தேசியச் செய்திகள்

## மருந்துத் துறையின் முதலாவது உலகப் புத்தாக்க உச்சி மாநாடு




- "மருந்துத் துறையின் முதலாவது உலகப் புத்தாக்க உச்சி மாநாட்டினை" பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தொடங்கி வைத்தார்.
- இந்த உச்சி மாநாடானது, அரசாங்கம், கல்வித்துறை, தொழில்துறை, முதலீட்டாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் குழுமங்களைச் சேர்ந்த முக்கியமான இந்திய மற்றும் சர்வதேசப் பங்குதாரர்களை ஒன்றிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது இந்தியாவின் மருந்துத் துறையில் ஒரு புதுமை படைக்கும் சூழலை உருவாக்கச் செய்வதற்கான முன்னுரிமைகள் பற்றி விவாதிப்பதற்கும் அவற்றை மூலோபாயப் படுத்துவதற்கும் ஆகும்.
- இந்த உச்சி மாநாடானது, வளர்ச்சிக்கான பெரும் திறன்கள் கொண்ட இந்திய மருந்துத் துறையில் உள்ள வாய்ப்புகளை எடுத்துக்காட்டுகிறது.

## 'தண்ணீரின் நாயகர்கள் - உங்கள் கதைகளைப் பகிருங்கள்' போட்டி

- ஜல் சக்தித் துறை அமைச்சகமானது 'தண்ணீரின் நாயகர்கள் - உங்கள் கதைகளைப் பகிருங்கள்' என்றப் போட்டியினை 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 01 முதல் தொடங்க உள்ளது.
- இந்தியா முழுவதிலும் உள்ள சிறப்பான தண்ணீர் வளங்காப்பு மற்றும் மேலாண்மை நடைமுறைகளை ஊக்குவிக்கும் மற்றும் சேகரிக்கும் நோக்கத்துடன் இந்தப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- தண்ணீர் வளத்துறையில் மாற்றம் கொண்டு வருவது தொடர்பான நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் நோக்கிலான இந்தியாவின் இத்தகைய முயற்சிகளை ஊக்குவிப்பதும் இதன் நோக்கமாகும்.




## பிரதான் மந்திரி கிராம் சதக் யோஜனா

- பொருளாதார விவகாரங்கள் மீதான அமைச்சரவைக் குழுவானது, பிரதான் மந்திரி கிராம் சதக் யோஜனா திட்டத்தின் முதலாவது மற்றும் இரண்டாவது கட்ட அமலாக்கத்தினை 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை தொடர்வதற்கும், இடதுசாரி தீவிரவாத அமைப்புகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான சாலை இணைப்புத் திட்டத்தினை 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை தொடர்வதற்கும் ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த மூன்று திட்டங்களின் கீழ் திட்டமிடப்பட்ட பணிகள் முடிக்கப்படுவதை உறுதி செய்வதற்காக இந்த காலக் கெடுவானது நீட்டிக்கப்பட்டுள்ளது.





### *தொடரப்பட வேண்டியதன் அவசியம்*

- கோவிட் பொது முடக்கம், நீண்டநாட்களாக பெய்து வரும் மழை, குளிர்காலம், வனம் சார்ந்த பிரச்சனைகள் போன்ற காரணங்களால், வடகிழக்கு மற்றும் மலைப் பகுதியிலுள்ள மாநிலங்களில் பிரதான் மந்திரி கிராம் சதக் யோஜனா திட்டத்தின் முதலாவது மற்றும் இரண்டாவது கட்டங்களின் கீழ் பெரும்பாலான பணிகள் நிலுவையில் உள்ளன.
- மேலும், கிராமப்புற பொருளாதாரம் தொடர்பான இந்த முக்கியமானப் பணிகளை

முடிப்பதற்கான கால அவகாசத்தை நீட்டிக்குமாறு பல மாநிலங்கள் மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்து வருகின்றன.

- சாலை இணைப்புப் பெறாத குடியிருப்புப் பகுதிகளுக்கு, அனைத்து வானிலைகளிலும் பயணிக்கும் வகையிலான சாலைகளை அமைப்பதன் மூலம் போக்குவரத்து வசதிகளை வழங்குவதே இதன் நோக்கம் ஆகும்.

## 16வது வருடாந்திரக் கல்வி நிலை அறிக்கை 2021




- 16வது வருடாந்திரக் கல்வி நிலை அறிக்கையானது (கிராமப்புறம்) பிரதாம் என்ற அறக் கட்டளையால் வெளியிடப்பட்டது.
- கிராமப்புற இந்தியா முழுவதும் உள்ள 5 முதல் 16 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் அடிப்படை வாசிப்புத் திறன் மற்றும் எண்கணித செயல்திறன் உள்ளிட்ட பள்ளிக் கல்வி நிலை குறித்த அறிக்கைகளை வருடாந்திரக் கல்வி நிலை அறிக்கையானது வழங்குகிறது.
- 2018 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் அரசுப் பள்ளிகளில் சேரும் குழந்தைகளின் விகிதத்தில் ஒட்டு மொத்தமாக உயர்வு ஏற்பட்டுள்ளதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- சேர்க்கை வீதமானது 64.3 சதவீதத்திலிருந்து 65.8% ஆக அதிகரித்துள்ளது.
- ஆனால் 2021 ஆம் ஆண்டில், சேர்க்கை வீதமானது திடீரென 70.3% ஆக அதிகரித்தது.

# சர்வதேசச் செய்திகள்

## இந்தியக் கடலோர நாடுகள் கூட்டமைப்பின் அமைச்சர்கள் குழுவின் 21வது சந்திப்பு




- ❖ இந்தியக் கடலோர நாடுகள் கூட்டமைப்பின் அமைச்சர்கள் குழுவின் 21வது வருடாந்திரச் சந்திப்பானது வங்கதேசத்தின் டாக்காவில் நடைபெற்றது.
- ❖ இந்தியா இந்த மாநாட்டில் காணொளி வாயிலாக பங்கேற்றது.
- ❖ இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர், டாக்டர் ராஜ்குமார் ரஞ்சன் சிங், இந்தியா சார்பாக இந்தச் சந்திப்பில் பங்கேற்றார்.
- ❖ இந்தச் சந்திப்பின் முடிவில், டாக்கா பிரகடனமானது ஏற்றுக் கொள்ளப் பட்டது.

# மாநிலச் செய்திகள்

## சிறந்த டிஜிட்டல் நிதிச் சேவைகளுக்கான ASSOCHAM விருது

- ❖ இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை இணைக் கழகத்தினால் வழங்கப்படும் சிறந்த டிஜிட்டல் நிதிச் சேவைக்கான விருதினை கர்நாடக விகாஸ் கிராமீனா வங்கி பெற்றுள்ளது.
- ❖ 'வட்டார கிராமப்புற வங்கிகள்' என்ற பிரிவின் கீழ் இந்த வங்கியானது இந்த விருதைப் பெற்றுள்ளது.
- ❖ 'ஆத்ம நிர்பர் பாரத்' என்ற இந்தியாவின் தொலைநோக்கு அம்சத் திட்டத்திற்கு ஏற்ப இந்த விருதானது வழங்கப்படுகிறது.

## மீன்பிடி வணிக காப்பகம்

- ❖ ஹரியானா மாநிலத்தின் குருகிராம் நகரில் முதல் முறையாக, பிரத்தியேக மீன்பிடி வணிகக் காப்பக நிறுவனம் என்ற நிறுவனமானது திறக்கப்பட்டுள்ளது.
- ❖ இது நிகழ்நேரச் சந்தை நிலவரங்களின் அடிப்படையில் மீன்வளத் தொடக்க நிறுவனங்களைப் பாதுகாத்து மேம்படுத்துவதற்கான ஒரு காப்பக நிறுவனமாகும்.
- ❖ இந்தக் காப்பக நிறுவனமானது LINAC- NCDC (National Cooperative Development Corporation - NCDC) மீன்வள வணிக காப்பு மையம் என அழைக்கப்படுகிறது.
- ❖ மத்திய மீன்வளம், கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர்

புர்ஷோத்தம் ரூபாலா இதனைத் திறந்து வைத்தார்.




### சிறந்த சுற்றுலாக் கிராமங்கள்




- தெலுங்கானா மாநிலத்தின் யாதாத்ரி புவனகிரி மாவட்டத்தில் உள்ள போச்சம்பள்ளி கிராமமானது ஐக்கிய நாடுகள் சபையின் உலகச் சுற்றுலா அமைப்பினால் சிறந்த சுற்றுலாக் கிராமங்களில் ஒன்றாக தேர்ந்தெடுக்கப்பட்டது.
- இந்த கிராமமானது கையினால் நெய்யப்பட்ட பிரபலமான இகாட் ரக புடவைகளுக்கு புகழ் பெற்றது ஆகும்.
- டிசம்பர் மாதம் 02 ஆம் தேதி அன்று ஸ்பெயினின் மாட்ரிட் நகரில் நடைபெற உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் உலகச் சுற்றுலா அமைப்பினுடைய பொதுச் சபையின் 24வது அமர்வில் இந்த விருதானது வழங்கப்படும்.

## விளையாட்டுச் செய்திகள்

### SAI நிறுவனம்சார் விருதுகள்

- மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் அனுராக் தாக்கூர் முதலாவது SAI நிறுவனம்சார் விருதுகளை புதுடெல்லியில் வழங்கினார்.

- இந்த விருதானது 246 விளையாட்டு வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்களுக்கு வழங்கப் பட்டது.
- தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகளில் சிறப்பான பங்களிப்பை வழங்கியதற்காக சிறந்த விருது மற்றும் சிறப்பு விருது ஆகிய பிரிவுகளில் மொத்தம் 162 விளையாட்டு வீரர்கள் மற்றும் 84 பயிற்சியாளர்களுக்கு இந்த விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.




## ICC ஆடவர் கிரிக்கெட் குழுவின் தலைவர்

- BCCI அமைப்பின் தலைவர் சவுரவ் கங்குலி ICC ஆடவர் கிரிக்கெட் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- 2012 ஆம் ஆண்டில் பொறுப்பேற்ற அனில் கும்ப்ளேவினையடுத்து கங்குலி நியமிக்கப் பட்டுள்ளார்.
- கும்ப்ளே அதிகபட்சமாக மூன்று தனித்தனி ரீதியிலான மூன்றாண்டு கால பதவிக் காலத்தினை வகித்ததைத் தொடர்ந்து அந்தப் பதவியில் இருந்து விலகினார்.




# முக்கிய தினங்கள்

## இயற்கை மருத்துவ தினம் - நவம்பர் 18

- இந்தியாவில் தேசிய இயற்கை மருத்துவ தினமானது ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 18 அன்று அனுசரிக்கப்படுகிறது.
- இது இயற்கை மருத்துவம் எனப்படும் செயற்கை மருந்து இல்லாத மருத்துவ


முறையின் மூலம் நேர்மறையான முறையில் மனம் மற்றும் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தச் செய்வதற்கான ஒரு தினமாகும்.

- இத்தினத்தினை ஆயுஷ் அமைச்சகமானது (ஆயுர்வேதம், யோகா மற்றும் இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி) அறிவித்தது.
- இந்த வருடத்தின் இந்த தினத்திற்கான கருத்துரு 'ரோக் முக்த் பாரத்' என்பதாகும்.




## உலகத் தத்துவ தினம் 2021 - நவம்பர் 18

- ஒவ்வோர் ஆண்டின் நவம்பர் மாதத்தின் மூன்றாவது வியாழன் அன்றும் உலகத் தத்துவ தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- 2021 ஆம் ஆண்டில், இந்த தினமானது நவம்பர் 18 அன்று வருகிறது.
- 2021 ஆம் ஆண்டின் உலகத் தத்துவ தினமானது, சமூகம், கலாச்சாரம், புவியியல் மற்றும் அரசியல் சூழல்களுடன் மனிதர்கள் மேற்கொள்ளும் வெவ்வேறு தொடர்புகளைப் பற்றிய விவாதத்தினை முன் வைக்கிறது.
- உலகத் தத்துவ தினமானது 2002 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ அமைப்பினால் அறிமுகப் படுத்தப் பட்டது.
- இந்த வருடத்தின் உலகத் தத்துவ தினத்திற்கான கருத்துரு "different interactions of human beings with their social, cultural, geographical and political environment, with the underlying objective of better understanding the contribution of philosophy in our contemporary societies and the challenges they face" என்பதாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★